(2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஈ) மக்கள் குரல் ஆசிரியர், அரகண்டநல்லூர் அப்துல் சலாம் ஆகியோர் மீதான வழக்கு பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாதது குறித்து.

திரு. பெ. சௌந்தர பாண்டியன் : பாயின்ட் ஆப் ஆர்டர், சட்டப் பேரவை விதி 191 (எ) (பி) ஆகிய இரண்டு விதிகளின்கீழ் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்புகிறேன். 191 (எ) என்ன சொல்கிறது என்றால் . . . . . .

The report of the Committee of Privileges shall be presented to the Assembly by the Chairman of the Committee or by any member of the Committee so authorised.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எல்லாம் முடிந்து போய் விட்டது.

திரு. பெ. சௌந்தர பாண்டியன் : நான் பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணுகிறேன். கேளுங்கள். சட்டப் பேரவை விதி எண் 191 (பி) என்ன சொல்கிறது என்றால் . . . .

As soon as may be, after the report has been presented, a motion in the name of the Chairman of the Committee or any member of the Committee may be made that the report be taken into consideration.

என்று இருக்கிறது. எங்களுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் கோவை செழியன் அவர்கள் மக்கள் குரல் பத்திரிகை ஆசிரியர் மீதும், அரகண்ட நல்லூரைச் சேர்ந்த அப்துல் சலாம் என்பவர் வக்கீல் நோட்டீசு கொடுத்தது பற்றி ஓர் உரிமைப் பிரச்னை கொண்டுவந்தபோது அதைத் தாங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தீர்கள். உரிமைக் குழு தன்னுடைய அறிக்கையை இந்தப் பேரவையில் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். சட்டமன்ற கூட்டத்தொடர் இன்றோடு முடிவடைகிறது. நம்முடைய விதிமுறைகளின்படி

இதுவரை அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதைப்பற்றி எந்தவிதமான அறிவிப்பும் எனக்கு வரவில்லை. நம்முடைய விதிமுறைகளை எந்த அளவிற்குப் பின்பற்றுகிறோம் என்பதற்கும் நடைமுறை விதிகள் பின்பற்றப்படுவதற்கு என்ன உத்திரவாதம் தாங்கள் அளிக்கிறீர்கள் என்பதற்கும் தங்களிடமிருந்து தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன என்ன பேரவையில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் அலுவல் ஆய்வுக் குழு முடிவு செய்கிறது. இந்த அறிக்கை வந்திருக்கிறது. அதைப்பற்றி விவாதிக்க நேரம் ஒதுக்க வேண்டுமென்று அங்கே சொல்லியிருக்க வேண்டும்.

திரு. க. உரொ. எட்மண்ட்: இந்த ரிப்போர்ட்டைப்பற்றி அங்கே எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடிவு எடுக்கவில்லையென்று தான் நானும் சொல்கிறேன். அந்தக் குழுவிலே கலந்துகொள்கின்ற கட்சித் தலைவர்கள் அதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருந்தால். . . . . .

திரு. க. உரொ. எட்மண்ட்: இங்கே என்ன என்ன கன்ஸிடரேஷனுக்கு வரவேண்டுமென்று சொல்லியிருந்தால் அங்கே கேட்டிருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவர்களுக்கே தெரியுமே.

திரு. பெ. சீனிவாசன்: சார், உங்களுடைய தீர்ப்பை நான் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். தீர்ப்பைப்பற்றி விவாதிக்கக்கூடாது. ஆனால் இந்தத் தீர்ப்பின் மூலம் என்னுடைய சந்தேகம் தீரவில்லை என்று நான் சொல்வது எந்த வகையிலும் தங்களுடைய மரியாதையைக் குறைக்கும் என்று நான் கருதவில்லை. நான் பதவியை விட்டு போனேன். . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவரைப் பற்றி பேசக்கூடாது. முன்னாள் பேரவைத் தலைவரைப்பற்றி, துணைத்தலைவரைப்பற்றி பேசலாம் என்று தீர்ப்பளித்து இருக்கிறேன். ரிமூவல் மோஷன் கொடுத்தாலன்றி இப்போது இருக்கிற பேரவைத் தலைவரைப்பற்றிப் பேசக்கூடாது. முன்னாள் பேரவைத் தலைவரைப்பற்றி, துணைத்தலைவரைப்பற்றிப் பேசலாம்.